# இரும்பின் குரல்

AMMAN-TRY

இது ஒரு **AMMAN - TRY**-யின் முயற்சி

திருச்சி | ஜூலை 2024 | 12 பக்கம் | இலவசம் | பதிப்பு 10

**AMMAN-TRY GROUP**

**BILLETS | TMT BARS | PIPES | TUBES**




09, 10 மார்ச் 2024 அன்று

**AMMAN-TRY GROUP**

நிறுவனத்தின் **வெள்ளி விழா**

மிகச் சிறப்பாக

கொண்டாடப்பட்டது, மேலும்

எங்களது புதிய அறிமுகமான

**PIPES & TUBES**-ஐ

நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்

**திரு.எம்.சோமசுந்தரம்**

அவர்களால்

அறிமுகப்படுத்தப்பட்டது.













# AMMAN-TRY GROUP வெள்ளி விழா






















09, 10 மார்ச் 2024 அன்று AMMAN-TRY GROUP நிறுவனத்தின் வெள்ளி விழா நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருடன் திருச்சி கலையரங்கம் திருமண மண்டபத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பின்பு AMMAN-TRY GROUP 25 வருடங்கள் கடந்து வந்த பாதையை வெள்ளி விழா மலராக வெளியிடப்பட்டது. மேலும் நிறுவனத்துடன் பல வருடமாக பயணித்து வந்த ஊழியர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் மற்றும் சிறப்பு பரிசுகள் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது, மேலும் எங்களது புதிய அறிமுகமான PIPES & TUBES-ஐ நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. எம். சோமசுந்தரம் அவர்கள் வெளியிட, அதனை தமிழகத்தின் முன்னணி அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட PIPES & TUBES தென்னிந்தியாவின் கட்டுமானத் துறையின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் AMMAN-TRY GROUP நிறுவனம் கட்டிடத்தின் அமைப்பிற்கு (Structural) பயன்படுத்தப்படும் PIPES & TUBES வலுவாகவும், நீடித்ததாகவும், மேலும் கட்டுமான பயன்பாட்டின் சக்திகளை தாங்கும் தன்மையை கொண்டதாக இருக்கின்றது.

இந்த நிகழ்விற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்து அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.




3 ஏப்ரல் 2024 அன்று புதுடெல்லியில் உள்ள India Habitat Centre-ல் நடைபெற்ற தேசிய கட்டுமானத் தொழில் மேம்பாட்டு கவுன்சிலின் 15-வது CIDC விஸ்வகர்மா விருதுகள் மற்றும் இந்திய கட்டுமானத்துறை சந்திப்பு 2024 நிகழ்வில் AMMAN-TRY GROUP நிறுவனத்திற்கு இந்திய அளவிலான **"CIDC Partners in Progress Trophy"** விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. கட்டுமானத் தொழில் மேம்பாட்டு கழகத்தின். இந்த வருடத்திற்கான விஸ்வகர்மா விருது வழங்கும் நிகழ்ச்சியில் AMMAN-TRY நிறுவனத்திற்கு இவ்விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை நிறுவனத்தின் சார்பாக இயக்குநர் திரு. S. சரண் அவர்களும் மற்றும் முதுநிலை மேலாளர் திரு.B.சந்திரசேகரன் அவர்களும் பெற்றுக் கொண்டனர். கட்டுமானத் தொழில் மேம்பாட்டு கவுன்சிலின் விஸ்வகர்மா விருது - புதுடெல்லியில் உள்ள இந்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பின் கீழ் செயல்பட்டு வருகிறது.



## AMMAN – TRY NEW DEPOT @ CHENNAI

15 ஏப்ரல் 2024 அன்று எங்களது நிறுவன தலைவர் திரு.S.P. முத்துராமலிங்கம் அவர்கள் முன்னிலையில் எங்களது நிர்வாக இயக்குநர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் சென்னை, பொன்னேரி நகரம், பஞ்செட்டி, திருவள்ளூரில் புதிய AMMAN - TRY RETAIL BLAKMET DEPOT திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்கள். மேலும் இதில் எங்களது துணைத் தலைவர், விற்பனையாளர்கள், சென்னை விற்பனை பிரிவு (VP Sales) மேலாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்.






திருச்சியை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் AMMAN-TRY GROUP நிறுவனம் தமிழகம் முழுவதும் சுமார் 500 க்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களை கொண்டு செயல்பட்டு வருகின்றது. விற்பனையாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தங்க நாணய பரிசுத் திட்டம் அறிமுகப்படுத்தி விற்பனை இலக்கை அடைந்த 100க்கும் மேற்பட்ட விற்பனையாளர்களுக்கு கும்பகோணத்தில் 5.02.2024 அன்று தங்க நாணயம் வழங்கப்பட்டது.மேலும் இதில் கலந்து கொள்ள முடியாத விற்பனையாளர்களுக்கு அவர்களின் கடைகளுக்கே எடுத்துச் சென்று எங்களது மேலாளர்கள் தங்க நாணயத்தை வழங்கி வந்தனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்.

# பார் பெண்டர் சந்திப்பு

**கர்நாடகா மாநிலம் மைசூரில் முதன்முறையாக**

பார் பெண்டர்களுக்கு TMT bars-களை பற்றியும் Structural லில் பயன்படுத்தப்படும் Pipes & Tubes பற்றியும் விழிப்புணர்வு அளிக்கும் வகையில் AMMAN-TRY நிறுவனம் எங்களது விற்பனையாளர்களோடு இணைந்து பார் பெண்டர் சந்திப்பு 23 வருடங்களுக்கு மேலாக நடத்தி வருகிறது. இதில் பங்கு பெறும் அனைவருக்கும் AMMAN-TRY -ன் LPLS முறையில் தயாரிக்கப்பட்ட 550 D கம்பிகளுக்கும் மற்ற 550 கம்பிகளுக்கும் இடையிலான வித்தியாசம் பற்றியும், நமது கம்பியின் Micro Structure பற்றியும், அதன் சிறப்பம்சங்கள் பற்றியும், CRS கம்பிகளின் பயன்பாடு பற்றியும், AMMAN-TRY கம்பிகள் தேவையான அளவுகளில் கிடைப்பதை பற்றியும் மற்றும் Ready Made Rings பற்றியும் விளக்கம் அளிக்கப்படுகின்றது. பின்னர் இச்சந்திப்பில் கலந்துகொண்ட அனைவருக்கும் இரவு விருந்தோடு அவர்களுக்கு T-Shirt, Cap, Silver Utensils, Brochures மற்றும் Catalogue அன்பளிப்பாக வழங்கப்படுகின்றது.

## பார் பெண்டர் சந்திப்பு பற்றிய விவரங்கள் பின்வருமாறு

| நாள் | விற்பனையாளர் முகவரி | இடம் | பார்பெண்டர்கள் |
|---|---|---|---|
| 05-02-2024 | V.R.K ஸ்டீல்ஸ் - வடலூர் | ராஜமாதாங்கி மினி ஹால் | 100 |
| 06-02-2024 | ஸ்வேதா ஏஜென்சிஸ் - அரியலூர் | ஹோட்டல் கருணா | 70 |
| 06-02-2024 | தமிழ்மணி ஏஜென்சிஸ் - அரியலூர் | ஹோட்டல் கருணா | 30 |
| 07-02-2024 | கோல்டன் ஸ்டீல்ஸ் | திருமழபாடி | 50 |
| 13-02-2024 | வஹாப் ஏஜென்சிஸ் - ஆலங்குடி | பள்ளிவாசல் சமுதாய குடம் | 150 |
| 15-02-2024 | எம்.கருப்பையா | புதுக்கோட்டை | 100 |
| 16-02-2024 | எம்.கருப்பையா | புதுக்கோட்டை | 100 |
| 17-02-2024 | எம்.கருப்பையா | புதுக்கோட்டை | 100 |
| 23-02-2024 | கோல்டன் ஸ்டீல் நிறுவனம் | திருப்பத்தூர் | 100 |
| 11-03-2024 | தமிழ்நாடு ஸ்டீல்ஸ் | செங்கம் | 50 |
| 12-03-2024 | ஸ்ரீ கிருஷ்ணா டிரேடர்ஸ் | ரமேஷ் திருமண மண்டபம் - போளூர் | 70 |
| 13-03-2024 | V.R சுந்தர முதலியார் ஸ்டீல்ஸ் | ஆரணி | 50 |
| 14-03-2024 | K P R ஸ்டீல்ஸ் & சிமெண்ட்ஸ் | பி.முட்டூர், கடலூர் | 50 |
| 24-04-2024 | ஸ்ரீ குமரன் ஸ்டீல்ஸ் & சிமெண்ட்ஸ் | ரோட்டரி ஹால் - தர்மபுரி | 100 |
| 25-04-2024 | ஸ்ரீ பகவதி ஸ்டீல்ஸ் | ஓசூர் டிரேடர்ஸ் அசோசியன்ட் டிரஸ்ட் - ஓசூர் | 120 |
| 26-04-2024 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஹார்டுவேர்ஸ் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா கிராண்ட் பேலஸ்(AC) | 200 |
| 08-05-2024 | சரவணா டிரேடர்ஸ் | காஞ்சிபுரம் | 50 |
| 09-05-2024 | ராஜலட்சுமி டிரேடர்ஸ் | செங்கல்பட்டு | 100 |
| 10-05-2024 | வெங்கடேஸ்வரா ஸ்டீல்ஸ் | தாத்தையங்கார் பேட்டை | 65 |
| 16-05-2024 | சக்தி ஏஜென்சிஸ் | கேளம்பாக்கம் | 50 |
| 17-05-2024 | கற்பகம் ஸ்டீல் | கோவிலம்பாக்கம் | 50 |
| 19-05-2024 | ஸ்ரீ மலே மகாதேஸ்வரா ஸ்டீல்ஸ் & சிமெண்ட் | குண்ட்லுப்பேட்டை,மைசூர் | 60 |








# பொறியாளர் சந்திப்பு

AMMAN-TRY-ன் தற்போதைய தொழில்நுட்பத்தை தெரிவிக்கும் விதமாக விற்பனையாளர் உடன் பொறியாளர்களை சந்தித்து AMMAN-TRY TMT கம்பிகளில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் பற்றியும் கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும், LPLS முறையில் தயாரிக்கபட்ட 550D கம்பிகளின் சிறப்பம்சங்கள் பற்றியும், மேலும் Structural-லில் பயன்படுத்தப்படும் Pipes & Tubes பற்றியும் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டு பின்பு அவர்களுக்கு Pen, keychain, brochure ,Bag,Samy Photo மற்றும் catalogue வழங்கப்பட்டது.

பொறியாளர் சந்திப்பு பற்றிய விவரங்கள் பின்வருமாறு

| வ.எண் | தேதி | விற்பனையாளர் | பொறியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 17-02-2024 | தங்கம் ஸ்டீல்ஸ் - வல்லம் | 25 |
| 2 | 16-04-2024 | எம். கருப்பையா & கோ - புதுக்கோட்டை | 20 |

# நாயுடுபேட்டை AMMAN - TRY - ன் அதிநவீன உருட்டாலை



29 பிப்ரவரி 2024 அன்று சென்னையின் பல்வேறு இடங்களில் உள்ள விற்பனையாளர்கள் அனைவரும் நாயுடுபேட்டையில் உள்ள AMMAN - TRY -ன் அதிநவீன உருட்டாலையை பார்வையிட்டனர். அவர்களுக்கு AMMAN - TRY – ன் புதிய அதிநவீன உருட்டாலையின் சிறப்பம்சங்கள் பற்றியும், 550 D தயாரிக்கும் முறை பற்றியும் உருட்டாலையில் பயன்படுத்தப்படும் அதி நவீன தொழில் நுட்பங்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து Hotel Kinnera - வில் பொறியாளர்கள் சந்திப்பு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இதில் 550D கம்பிகளின் சிறப்பம்சங்கள் பற்றி விவரிக்கப்பட்டது. இச்சந்திப்பில் பங்கு பெற்ற அனைவருக்கும் இரவு விருந்தோடு Flask with cup set, Bag, Gifts, Brochures, மற்றும் Catalogue அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



20 ஜூன் 2024 அன்று நாயுடுபேட்டையில் உள்ள AMMAN - TRY - ன் அதிநவீன உருக்காலை மற்றும் உருட்டாலையை " L & T தரக் கட்டுப்பாட்டு குழு " அவர்கள் பார்வையிட்டனர். அவர்களுக்கு AMMAN - TRY–ன் புதிய அதிநவீன உருட்டாலையின் சிறப்பம்சங்கள் பற்றியும், 550 D தயாரிக்கும் முறை பற்றியும் உருட்டாலையில் பயன்படுத்தப்படும் அதி நவீன தொழில்நுட்பங்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.



## Industrial Visit (IV)

AMMAN-TRY நிறுவனம் பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு அறிவூட்டும் வகையில் Industrial Visit-ற்கு அனுமதி அளிக்கிறது. அவ்வாறு வரும் மாணவ மாணவிகளுக்கு கம்பி தயாரிக்கும் தொழிற்சாலை எவ்வாறு செயல்படுகின்றது என்பதை பற்றியும், TMT கம்பிகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மூல பொருட்கள் பற்றியும், கம்பிகள் தயாராகும் முறை பற்றியும், கம்பிகளுக்கு செய்யப்படும் பல்வேறு விதமான தர பரிசோதனை பற்றியும் விளக்கம் அளிக்கபடுகின்றது.

**Industrial Visit(IV)** பற்றிய விவரங்கள் பின்வருமாறு

| வ.எண் | தேதி | கல்லூரி | மாணவர்கள் |
|---|---|---|---|
| 1 | 07-03-2024 | M.A.M பொறியியல் கல்லூரி, திருச்சி | 87 |
| 2 | 08-03-2024 | M.A.M பொறியியல் கல்லூரி, திருச்சி | 90 |
| 3 | 19-03-2024 | அரசு பொறியியல் கல்லூரி - ஸ்ரீரங்கம் | 50 |
| 4 | 17-05-2024 | மயிலம் பொறியியல் கல்லூரி - விழுப்புரம் | 50 |







25 பிப்ரவரி 2024 அன்று திருச்சி நகைச்சுவை மன்றம் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழானது முன்னாள் தமிழக தலைமைச் செயலாளர் திரு.வெ. இறையன்பு முன்னிலையில் திருச்சியில் மிக பிரமாண்டமாக நடை பெற்றது. இங்நிகழ்ச்சியில் எங்களது நிர்வாக இயக்குநர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் தலைமை பொறுப்பேற்று சிறப்புரை ஆற்றினார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். இந்தப் விழாவிற்கு ஸ்பான்சர் செய்ததில் **AMMAN - TRY** நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.

# Special Events

2 மார்ச் 2024 அன்று கோயம்புத்தூரில்ஹிந்துஸ்தான் கல்லூரி.கலாம் ஆடிட்டோரியத்தில் " VIKKALS VIKRAM " நகைச்சுவை பட்டிமன்றம் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு ஸ்பான்சர் செய்ததில் AMMAN - TRY நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.







மதுரை, திருச்சி, ஓசூர், சேலம், தர்மபுரி, கோவை, தென்காசி, நாமக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திருவாரூர், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, கரூர், சிவகங்கை, விருதுநகர், கன்னியாகுமரி, கடலூர், திருவண்ணாமலை, மயிலாடுதுறை, மற்றும் பெரம்பலூர் ஆகிய 40 க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள பிரசித்தி பெற்ற வழிபாட்டு ஸ்தலங்களுக்கு AMMAN-TRY GROUP நிறுவனத்தின் சார்பாக விபூதி பாக்கெட்டுகள் வழங்கப்பட்டதோடு மற்றும் சில வழிபாட்டு ஸ்தலங்களுக்கு சுவர் கடிகாரங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

"YES NAGERCOIL Chapter Day - 2024" ஆனது 21 March 2024 அன்று ஹோட்டல் ஸ்ரீ கிருஷ்ணா, நாகர்கோவிலில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட எங்களது நிர்வாக இயக்குனர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் " பிரபலங்களை மட்டும் வைத்து தொழிலை உயர்த்த முடியாது " என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். இதில் 200-க்கும் மேற்பட்ட இளம் தொழில் முனைவோர்கள்.மாணவர்கள் பங்கேற்றனர்.



















திருச்சி தேசிய கல்லூரியில் 15,16,17,18 ஏப்ரல் 2024 ஆகிய தேதிகளில் "PLACEMENT DAY -2024" ஆனது Dr.V.Krishnamurthy Auditorium-தில் மிக பிரமாண்டமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் எங்களது நிர்வாக இயக்குநர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் தலைமை பொறுப்பேற்று சிறப்புரை ஆற்றினார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்.



12 ஏப்ரல் 2024 முதல் 23 ஏப்ரல் 2024 வரை மதுரையில் சித்திரை திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் AMMAN - TRY நிறுவனத்தின் சார்பாக சிறப்பான முறையில் 13,500 ஸ்ரீ கள்ளழகர் பாக்கெட் காலண்டர், நீர்மோர், விபூதி பாக்கெட் மற்றும் "Police Beat Banner" வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

24 ஏப்ரல் 2024 அன்று AMMAN - TRY நிறுவனத்தின் சார்பாக "திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்ரா பௌர்ணமியை" முன்னிட்டு கிரிவலப் பாதையில் கிழக்கு மேற்கு வடக்கு திசைகளில் சிறப்பான முறையில் 25,000 பாக்கெட் காலண்டர் வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.





28 ஏப்ரல் 2024 அன்று "World Safety Day" கொண்டாடப்பட்டு வருகிறது. இதை முன்னிட்டு நமது நிறுவனத்தின் தொழிற்சாலைகளில் திருச்சி, நாயுடுபேட்டையில் உள்ள பணியாளர்களுக்கு "Safety Class" ஆனது எடுக்கப்பட்டது. இதில் நமது தொழிற்சாலை பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

30 April 2024 அன்று HOTEL POPPY'S - மதுரையில் நடைபெற்ற YES MADURAI நிகழ்ச்சியில் தலைமை ஏற்று "உழைப்பால் உருவான உருக்கின் சரித்திரம் Life Lessons from Successful Entrepreneur " என்னும் தலைப்பில் எங்களது நிர்வாக இயக்குநர் திரு.எம்.சோமசுந்தரம் சிறப்புரையாற்றினர். இதில் இயக்குநர் திருமதி.S.வனிதா அவர்களும் 100-க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.





05 மார்ச் 2024 வாஸ்து நாள் அன்று பூமி பூஜை செய்த மக்கள் அனைவருக்கும் AMMAN-TRY சார்பாக சாமி போட்டோ வழங்கப்பட்டது. மேலும் AMMAN-TRY TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

23 ஏப்ரல் 2024 வாஸ்து நாள் அன்று பூமி பூஜை செய்த மக்கள் அனைவருக்கும் AMMAN-TRY சார்பாக சாமி போட்டோ வழங்கப்பட்டது. மேலும் AMMAN-TRY TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும். உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

11 மே 2024 அன்று AMMAN - TRY நாயுடு பேட்டை தொழிற்சாலையில் அமைந்துள்ள கோவில் கும்பாபிஷேகம் செய்து இரண்டு வருடம் நிறைவு பெற்றதை ஒட்டி சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் எமது நிறுவன தலைவர் திரு. S.P. முத்துராமலிங்கம், நிர்வாக இயக்குனர் திரு.எம்.சோமசுந்தரம் - வனிதா மற்றும் தொழிற்சாலை பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.






18 மே 2024 அன்று திருச்சியில் MORAIS CITY-ல் PK - 2.0 PRADEEP KUMAR "LIVE IN CONCERT" மிக பிரமாண்டமாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு ஸ்பான்சர் செய்ததில் AMMAN - TRY நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.




19 மே 2024 அன்று திருச்சியில் முதன்முறையாக முழுநாள் வாழ்வியல் பயிலரங்கம் ஒளி பரவட்டும் என்னும் தலைப்பில் கலைமாமணி சொல்வேந்தர் சுகி சிவம் அவர்களின் தலைமையில் "மொராய்ஸ் சிட்டி கிளாரியான் அரங்கம்(A/C)" -தில் நடை பெற்றது. இந்த விழாவிற்கு ஸ்பான்சர் செய்ததில் AMMAN - TRY நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.






25 மே 2024 அன்று MDS Rebar Engineering Services நிறுவனம் சார்பாக "9th Year Anniversary" 2024 திருச்சி SRM - Hotel லில் மிக பிரமாண்டமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் எங்களது நிர்வாக இயக்குநர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் தலைமை பொறுப்பேற்று சிறப்புரை ஆற்றினார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்.



# கட்டிடத்தின் அஸ்திவாரத்தினை எவ்வாறு வலுவாக்குவது?

மனித உடலுக்கு எவ்வாறு பாதங்களும், கால்களும் பயன்படுகின்றனவோ, அது போலவே விடுகளுக்கு அடித்தளமும் அஸ்திவாரமும், மிகவும் முக்கியமானது. விட்டை தரையில் நங்கூரமிட்டு அஸ்திவாரத்தினை ஆதரிக்கின்றது. இது வீட்டின் எடையை சுமக்கின்றது.அடித்தளங்கள் பல பொருட்களிலிருந்து செய்யப்பட்டிருந்தாலும்-கல், பிளாக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட மரம் கூட-வலுவூட்டப்பட்ட கான்கிரிட் பெரும்பாலான புதிய வீடுகளில் பயன்படுத்தப்படுகிறது. கட்டிடக்கலைஞர்கள் மர வடிவங்களை உருவாக்கி, வடிவ முகங்களுக்கு இடையில் எஃகு வலுவூட்டும் கம்பிகளை ("ரீபார்") நிறுவுகிறார், பின்னர் படிவங்களை கான்கிரீட் மூலம் நிரப்புகிறார். கான்கிரீட் அமைக்கப்பட்ட பிறகு, படிவங்கள் அகற்றப்படுகின்றன. அடித்தளம் என்பது எந்தவொரு திட்டத்திற்கும் தொடக்கப்பொருள் ஆகும். ஒரு உறுதியான மற்றும் வலுவான அடித்தளம் இல்லாமல், எந்தவொரு மேம்பட்ட வேலையையும் செய்ய முடியாது, ஏனெனில் அடித்தளம் அடிப்படை பகுதியாக செயல்படுகிறது. ஒரு வீட்டைக் கட்டும் போது, முதலில் கட்டப்படுவது வீட்டின் அஸ்திவாரம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். மக்கள் ஏன் பல பிரச்சனைகளைச் சந்தித்து, வீட்டின் அடித்தளத்தைக் கட்டுவதில் கணிசமான அளவு கட்டுமான நேரத்தை செலவிடுகிறார்கள் என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? முதலில் அடித்தளத்தை அமைப்பது என்பது வெறும் கட்டுமானப் பாரம்பரியம் மட்டுமல்ல. இது செய்யப்படுவதற்கான காரணம் என்னவென்றால், அடித்தளம் வீட்டின் அஸ்திவாரமாக மாறி, வரும் ஆண்டுகளில் அதை உயரமாக நிற்க வைக்கிறது! அஸ்திவாரம் பலவீனமாக இருந்தால், அது முழு வீட்டையும் ஒரு மணல் கோட்டை போல எளிதில் நொறுக்கக்கூடும். கட்டுமானங்களின் வலுவான அடித்தளங்கள் எதிர்காலத்தின் வலுவான, நவீன, மேம்பட்ட பெருநகரங்களுக்கு வழிவகுக்கும் மற்றும் ஒரு நாட்டின் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும்!

## வீடுகளுக்கு ஏன் வலுவான அஸ்திவாரம் தேவை?

ஒரு வீட்டின் அஸ்திவாரம் அதன் எடை முழுவதையும் பூமிக்கு மாற்றுவதற்காக கட்டப்பட்டது. இது அதிக நிலைத்தன்மையையும், உறுதியையும் கொண்டதாக இருக்க வேண்டும் . வீட்டின் அஸ்திவாரம் அமைக்கும் போது கவனிக்க வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. இவற்றை முறையாகச் செய்யாவிட்டால், எதிர்காலத்தில் பெரிய பிரச்னைகளுக்குக் காரணமாக இருக்கலாம்.

## வலுவான அஸ்திவாரத்தை உருவாக்குவதற்கான சில காரணங்கள்:

உங்கள் அஸ்திவாரம் தரைக்கு மிக அருகில் இருந்தால், அது துருப்பிடிக்கும் மற்றும் அரிப்புக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடும், குறிப்பாக நீங்கள் கடல் கரைகள் அல்லது கடலோரப் பகுதிகளில் வசிக்கிறீர்கள் என்றால் வீட்டின் அஸ்திவாரம் துருப்பிடிக்க ஆரம்பித்தவுடன், அது வீட்டின் மற்ற பகுதி முழுவதும் பரவி, பலவீனமாக்குகிறது. எனவே உங்கள் அஸ்திவாரம் துருப்பிடிப்பதைத் தடுக்க, நீங்கள் AMMAN-TRY இன் அரிப்பை-எதிர்க்கும் ஸ்டீல் பார்களை (CRS) கட்டுமானத்திற்குப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது. CRS (அரிப்பு எதிர்ப்பு எஃகு) பார்கள் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்படும் TOR எஃகு கொண்டு தயாரிக்கப்படுவதால் கீழ்க்கண்ட பல நன்மைகளை வழங்குகின்றன:

1. இதன் உற்பத்தியில் முறுக்கு செயல்பாடுகள் இல்லை, எனவே எஞ்சிய அழுத்தங்கள் எஃகு கம்பிகளில் இல்லை, அதன் அரிப்பு எதிர்ப்பு திறனை அதிகரிக்கிறது.

2. தெர்மோ-மெக்கானிக்கல் செயல்பாடுகள் மூலம் அவை உருவாக்கப்படுவதால், இவைகள் அரிப்பு மற்றும் துருவுக்கு அதிக எதிர்க்கும் திறன் கொண்டவை, கடற்கரைப் பகுதிகளில் வீடுகள், பாலங்கள், அணைகள், மேம்பாலம் போன்றவற்றின் கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்த ஏற்றதாக அமைகிறது!

அஸ்திவாரம் கூடுதல் கவனம் தேவைப்படுவதற்கு மற்றொரு காரணம், அது வீட்டின் அடிவாரத்தில் உள்ளது. அஸ்திவாரத்தில் ஏதேனும் தவறு ஏற்பட்டால், வீட்டின் கட்டுமானம் முடிந்ததும் அதை சரிசெய்யவது மிகவும் கடினமாக இருக்கும். உங்கள் வீடு தட்பவெப்ப மாற்றங்களை தாங்கி வாழவும், பல ஆண்டுகளுக்கு வலுவாக நிற்கவும் விரும்பினால், வீட்டின் அடித்தளத்தை எவ்வாறு வலுவாக உருவாக்குவது என்பதை அறிவது மிகவும் முக்கியம்.

## 1. மண்ணின் வகையை மனதில் கொள்ளுங்கள்

நீங்கள் கட்டும் மண் வகை கட்டுமான செயல்பாட்டில் பெரும் பங்கு வகிக்கிறது. எல்லா மண் வகையிலும் ஒரே மாதிரியான கட்டுமான பொருள்கள் பயன்படுத்தபடுவதில்லை.ஏனெனில் வீடும் ஒரே மாதிரியாக நீடித்து நிலைக்காது. மண்ணின் வகைக்கு ஏற்ப அஸ்திவார வகைகளை தேர்வு செய்ய வேண்டும். ரீபார் (அஸ்திவாரத்தில் பயன்படுத்தப்படும் கம்பிகள் மண்ணின் தரத்திற்கு ஏற்ப தகுந்த இடைவெளிகளில் அமைக்கப்பட வேண்டும்.

## 2. ரீபார் மண்ணுக்கு மிக அருகில் இல்லை என்பதை உறுதிப்படுத்தவும்

ரீபார் (வலுவூட்டப்பட்ட எஃகு கம்பிகள்) கான்கிரீட் தொகுதிக்குள் வைக்கப்படுகின்றன. நீங்கள் மறுபக்கத்தை வைக்கும்போது கான்கிரீட் குறைந்தபட்சம் 4 அங்குல தடிமனாக இருக்க வேண்டும். இது கான்கிரீட் உள்ளே தரையில் மற்றும் எஃகு இடையே சிறிது இடைவெளியை உருவாக்குகிறது. உங்கள் ரீபார் தரைக்கு அருகில் இருந்தால், அது துருப்பிடிக்கும் அபாயம் உள்ளது. துருப்பிடித்தவுடன், அது ரீபார் அமைப்பு முழுவதும் பரவி அஸ்திவாரத்தை வலுவிழக்கச் செய்கிறது.

எனவே இந்த நோக்கத்திற்காக CRS TMT பார்களைப் பயன்படுத்துவது மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது! நல்ல தரமான மற்றும் நம்பகமான TMT பார்களுக்கு ஓர் முன் உதாரணம் AMMAN-TRY TMT பார்கள் ஆகும். அவை கட்டப்பட்ட கட்டமைப்பிற்கு அதிக வலிமையை வழங்குகின்றனது. தங்கள் தேவைகேற்ப AMMAN-TRY TMT பார்கள் 6 மிமீ, 8 மிமீ, 10 மிமீ, 12 மிமீ, 16 மிமீ, 20 மிமீ மற்றும் 25 மிமீ 32 மிமீ உள்ளிட்ட அளவுகளில்

500க்கும் மேற்பட்ட விற்பனையார்களைக் கொண்டு விற்பனை செய்யபடுகிறது.

### 3. அஸ்திவாரம் மற்றும் கட்டிடத்தின் மேற்பறப்பின் வடிவமைப்பு மிகவும் முக்கியமானது

வீட்டின் எடையை எடுத்துக்கொள்வதற்கு அஸ்திவாரம் சமமான நீளம் மற்றும் அளவு இருக்க வேண்டும். அஸ்திவாரதை உருவாக்கும் கான்கிரீட் தொகுதிகள் சதுரமாகவும், அல்லது தகுந்த தகவமைப்புடன் அமைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

### 4. அஸ்திவாரத்தில் நீர்க்கசிவு மற்றும் இதர சேதாரம் இல்லாததை உறுதிப்படுத்தவும்

நீங்கள் அஸ்திவாரதை கட்டும் போது, நீங்கள் கட்டுமானத்தை மேலும் முன்னெடுப்பதற்கு முன், சிமெண்டிலிருந்து நீர் முழுமையாக ஆவியாகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஈரமான சிமெண்டில் கட்டத் தொடங்கினால், தண்ணீர் உள்ளே சிக்கி, அஸ்திவாரம் பலவீனமாக இருக்கும். அஸ்திவாரம் பல ஆண்டுகள் ஆன பின்னரும் கூட, அதன் வலிமையைத் தக்கவைக்க, அதன் நிலையை நீங்கள் தொடர்ந்து சரிபார்க்க வேண்டும். அஸ்திவாரத்தில் விரிசல் அல்லது நீர் கசிவு உள்ளதா என அவ்வப்போது சரிபார்த்து, சேதமடையாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்.

### 5. அஸ்திவாரத்தில் உள்ள போல்ட் மிகவும் முக்கியமானது

அஸ்திவாரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் போல்ட்கள் அஸ்திவாரதை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சட்டமானது அடித்தளத்தின் மீது சரியாகவும் சமமாகவும் அமைவதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். நீங்கள் அதற்கு ஏற்றார் போல் போல்ட்களை தகுந்த முறையில் உரிய Base Plate களை பொருத்தி அமைக்க வேண்டும்.

### 6. வானிலை எதிர்ப்பு பொருள் பயன்படுத்தவும்

அஸ்திவாரம் தரையில் உள்ளே கட்டப்பட்டிருப்பதால் நீர் வெளிப்பாடு, வானிலை மாற்றங்கள் போன்றவற்றால் காலப்போக்கில் கட்டிடத்தில் பாதிப்பு ஏற்படும். அத்தகைய நிலைமைகளில் இருந்து பாதுகாக்க அடித்தள சுவர்கள் மீது நீர்ப்புகா பொருள்கள் பயன்படுத்த வேண்டும்.

## AMMAN-TRY TMT
## கம்பிகளின் சிறப்பம்சங்கள்

- அதிக வலிமை – சரியான கார்பன் & மாங்கனிஸ் அளவுகளில் இருப்பதால் அதிக வலிமையை பெற்றுள்ளது.
- சிறந்து வளையும் தன்மை – சல்பர் & பாஸ்பரஸ் அளவுகள் மிக குறைவாக இருப்பதால் சிறந்த வளையும் தன்மை பெற்றுள்ளது
- பூகம்ப எதிர்ப்புத் தன்மை – சிறந்த நீண்டு நீளும் தன்மையுடன் இருப்பதால் அதிக பூகம்ப எதிர்ப்புத் தன்மை பெற்றுள்ளது
- வெப்பத்தை தாங்கும் தன்மை – கட்டிடங்களில் எதிர்பாராமல் ஏற்படும் தீ விபத்தின் போது அதிக வெப்ப நிலைகளும் கம்பிகளின் வலிமை குறைவதில்லை ( Upto 600◦ C)
- சிறந்த பற்றவைப்புத் தன்மை - Carbon Equivalent(C.E)ன் அளவு 0.40%க்குள் இருப்பதால் சிறந்த பற்றவைப்புத்தன்மை பெற்றுள்ளது.
- துரு எதிர்ப்புத் தன்மை – காப்பர் & குரோமியம் தேவையான அளவு இருப்பதால் சிறந்த துரு எதிர்ப்பு தன்மை பெற்றுள்ளது
- துல்லியமான எடை–கம்பியின் வடிவம், நீளம், எடை & RIB களின் அளவுகள் மிகத் துல்லியமான அளவில் இருக்குமாறு தயாரிக்கப்படுகிறது
- நியாயமான விலை – நியாயமான மற்றும் நடுநிலையான விலை

உங்கள் வீட்டின் அஸ்திவாரத்தை வலுவாக உருவாக்குவதற்கான வழிகள் இவை. உங்கள் வீடு சரியான நிலையில் இருப்பதற்கும், அதன் மையப்பகுதிக்கு பாதுகாப்பாக இருப்பதையும் உறுதிசெய்ய விரும்பினால், AMMAN-TRY TMT ஸ்டீல் பார்களைப் பயன்படுத்துவது மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. உங்கள் வீட்டின் அஸ்திவாரம் அமைப்பதில் கவனம் செலுத்தினால், பல ஆண்டுகளுக்கு கட்டிடங்கள் நீடித்து நிலைத்து நிற்கும்.



## AMMAN - TRY ஸ்டீல்ஸ் பைப்ஸ் மற்றும் டியூப்ஸ்

தென்னிந்தியாவின் கட்டுமான துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் AMMAN - TRY ஸ்டீல்ஸ் நிறுவனம் கட்டிடத்தின் அமைப்பிற்கு (Structural) பயன்படுத்தப்படும் ஸ்டீல்ஸ் பைப்ஸ் மற்றும் ஸ்டீல்ஸ் டியூப்ஸ் (Pipes & Tubes)-களை உற்பத்தி செய்து பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்துகிறோம் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

உறுதி

**நம்பகத்தன்மை**

ஆற்றல்

தென்னிந்தியாவின் No.1 பிராண்ட்

### வகைகள்

- வட்டம்
- சதுரம்
- செவ்வகம்

### மூலப்பொருள்











**நீண்ட காலம் நீடிக்கும் வலிமை உடையவை**

உங்களது நம்பிக்கை பல ஆண்டுகளுக்கு நீடிக்கும்

**பைப்ஸ் மற்றும் டியூப்ஸ் பயன்பாடுகள்**
**தொழில் சார்ந்த, வீட்டுக்குரிய மற்றும்**
**இதர கட்டடப்பணிகளில்**
**அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.**

### பண்புகள்

வலிமை | நேரான | பளபளப்பான | பற்றும் தன்மை




AMMAN-TRY GROUP

BILLETS | TMT BARS | PIPES | TUBES

IS : 2830 IS : 1786

## AMMAN-TRY GROUP

No. 15 & 16, Mannarpuram Main Road, Mannarpuram
Trichy - 620 020. For Support +91 75503 01234

info@ammantry.com www.ammantry.com mktg@ammantry.com

Follow us...